மாதவரம்–சிறுசேரி

# மெட்ரோ 2–வது கட்ட பணியில் 128 ரெயில் நிலையங்கள்

## 118 கி.மீட்டர் தூரத்துக்கு வழித்தடம்

சென்னை, பிப். 22–

மாதவரம் – சிறுசேரி மெட்ரோ 2–வது கட்ட பணியில் 129 ரெயில் நிலையங்கள், 118 கிலோ மீட்டர் தூர வழித்தட பாதைகள் அமைக்கப் படுகிறது.



மெட்ரோ ரெயில்

சென்னை மாநகர போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்காக மெட்ரோ ரெயில் திட்டம் உருவாக்கப்பட்டது. முதல் கட்டமாக கோயம்பேடு – ஆலந்தூர், சின்னமலை – விமான நிலையம் வரை உயர்மட்ட பாதையிலும், திருமங்கலம் – சென்ட்ரல், சைதாப்பேட்டை – வண்ணாரப்பேட்டை வரை சுரங்கப்பாதையிலும் மெட்ரோ ரெயில் போக்குவரத்து பயணிகள் சேவை நடந்து வருகிறது.

2–வது கட்டமாக 128 ரெயில் நிலையங்களுடன் 118.9 கிலோ மீட்டர் தூரத்துக்கு வழித்தட பாதைகள் உருவாக்கப்படுகிறது. இதன் மூலம் கூடுதல் பகுதிகளில் உள்ள மக்கள் பயன்பெறுவார்கள்.

மாதவரம் – சிறுசேரி

மாதவரம் – சிறுசேரி 2–வது கட்ட மெட்ரோ ரெயில் திட்டப்பணிகள் ஒருசில மாதங்களில் தொடங்கப்படுகிறது. தற்போது அனைத்து பகுதிகளிலும் மண் ஆய்வு பரிசோதனை பணிகள் நடந்து வருகிறது.

மத்திய–மாநில அரசுகளின் பங்களிப்புடன் உலக வங்கி நிதி உதவி மூலம் இப்பணிகள் நடைபெற உள்ளது.

மாதவரம்–சிறுசேரி வழித்தடத்தில் 2–வது கட்ட பணியில் முடிவில் 108 கி.மீட்டர் தூரத்தில் 108 ரெயில் நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு இருந்தது.

தற்போது கூடுதல் பகுதி இடங்களை இணைத்து 118.9 கி.மீட்டர் தூரத்துக்கு 128 ரெயில்நிலையங்கள் அமைக்கும் வகையில் மெட்ரோ ரெயில் வழித்தடம் உருவாக்கப்படுகிறது. மாதவரம்–சிறுசேரி மெட்ரோ ரெயில் திட்ட பணிகள் ரூ. 69,180 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படுகிறது.

3 வழித்திட்ட பாதை

3 வழித்திட்ட பாதைகளில் மெட்ரோ ரெயில் பணிகள் தொடங்க உள்ளது. மாதவரம் – சிறுசேரி 45 கிலோ மீட்டர் தூரத்துக்கும், கலங்கரைவிளக்கம் – பூந்தமல்லி 26 கிலோ மீட்டர் தூரத்துக்கும், மாதவரம் – சோழிங்கநல்லூர் 47 கிலோ மீட்டர் தூரத்துக்கும் மெட்ரோ ரெயில் வழித்தட பணிகள் நடைபெற உள்ளது.

இந்த வழித்தட பாதைகளின் மொத்த தூரம் 118.9 கிலோ மீட்டர் ஆகும். இதில் 128 மெட்ரோ ரெயில் நிலையங்கள் அமைக் கப்படுகிறது.